## எண்ணூரில் எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட 9,001 குடும்பங்களுக்கு ரூ.8.68 கோடி நிவாரணம்: முதல்வர் ஸ்டாலின் உத்தரவு



**சென்னை:** மிக்ஜாம் புயல், கனமழையை தொடர்ந்து ஏற்பட்ட எண்ணெய்கசிவால் பாதிக்கப்பட்ட 9,001 குடும்பங்களுக்கு ரூ.8.68 கோடி நிவாரணம் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்த தொகை, பாதிக்கப்பட்ட வர்களின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

சென்னையில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட அதிகன மழை, வெள்ளப் பெருக்கின்போது, மணலி பகுதியில் உள்ள தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய பெட்ரோலிய எண்ணெய் கழிவால் எண்ணூர் முகத்துவார பகுதிகளில் எண்ணெய் படலம் ஏற்பட்டது. இதனால்,அப்பகுதியில் உள்ள 8 மீனவ கிராமங்கள் பாதிக்கப்பட்டன.

கொசஸ்தலை ஆற்றின் கரையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி படகுகள் மற்றும் வலைகள் மீது எண்ணெய் கழிவுகள்படிந்ததால், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. அப்பகுதிகளில் வீடுகளில் படிந்தஎண்ணெய் கழிவுகளால் பொதுமக்கள் அவதிக்குள்ளாயினர்.

இதுதொடர்பாக தேசிய பசுமைதீர்ப்பாயத்தின் தென் மண்டலஅமர்வு தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரித்தது. அதில்,பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய

நிவாரணம் வழங்க வேண்டும் என்றுதமிழக அரசுக்கு உத்தரவிடப்பட்டது. எண்ணூர் முகத்துவார பகுதியில் நீரில் படந்துள்ள எண்ணெய் கசிவை அகற்றும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

**அதிகாரிகள் பேச்சுவார்த்தை:** இதற்கிடையே, கடந்த 17-ம்தேதி எண்ணெய் கசிவால் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி, தாழங்குப்பம் பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே,சென்னை மண்டலம் 1-ன் கண்காணிப்பு அதிகாரி கந்தசாமி மற்றும்காவல் துறை அதிகாரிகள் சம்பவஇடத்துக்கு சென்று மீனவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது, ‘‘மிக்ஜாம் புயலால்ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு வழங்கும் ரூ.6,000 நிவாரணத் தொகை, எண்ணூர் பகுதியில் உள்ள மீனவர் குடும்பங்களுக்கும் வழங்கப்படும். மேலும், எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு கூடுதலாக ஒருகுடும்பத்துக்கு ரூ.12,500-ம், சேதமடைந்த படகுக்கு ரூ.10 ஆயிரமும் வழங்கப்படும். மீனவர்களின் வங்கிக் கணக்கு விவரம் சேகரிக்கப்பட்டு வரப்படுகிறது. நிவாரணத் தொகை விரைவில் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்’’ என்று கண்காணிப்பு அதிகாரி கந்தசாமி உறுதி அளித்தார். இதையடுத்து, மீனவர்கள் தங்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.

இந்நிலையில், நிவாரணம் தொடர்பாக தமிழக அரசு நேற்றுவெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கொசஸ்தலை ஆற்றில் எண்ணூர் முகத்துவார பகுதியில் கடந்த5-ம் தேதி ஏற்பட்ட எண்ணெய் கசிவை அகற்ற தமிழக அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த எண்ணெய் கசிவால், காட்டுக்குப்பம். சிவன்படைக்குப்பம். எண்ணூர் குப்பம் முகத்துவாரக்குப்பம். தாழங்குப்பம். நெட்டுக்குப்பம். வ.உ.சி நகர். உலகநாதபுரம் மற்றும் சத்தியவாணிமுத்து நகர் ஆகிய கடலோரமீனவ கிராமங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடி படகுகள் மற்றும் மீன்பிடி வலைகளில் எண்ணெய் படிந்து சேதம் ஏற்பட்டது.

**வாழ்வாதாரம் பாதிப்பு:** மேலும் இக்கிராமங்களை சார்ந்த மீனவர்கள் எண்ணெய் கசிவால் மீன்பிடி தொழிலுக்கு செல்ல இயலாததால் அவர்களது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.6,000 வழங்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின்ஏற்கெனவே அறிவித்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அந்த தொகை வழங்கப்பட்டுள்ளது.

**வங்கி கணக்கில் வரவு..** இதைத் தொடர்ந்து கூடுதலாக, எண்ணெய் கசிவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மேற்கண்ட மீனவ கிராமங்களை சார்ந்த 2,301 குடும்பங்களுக்கு நிவாரண தொகையாக தலா ரூ.12,500 வீதமும், எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட 787 மீன்பிடி படகுகளை சரிசெய்யபடகு ஒன்றுக்கு தலா ரூ.10,000 வீதமும் மொத்தம் ரூ.3 கோடி தமிழக அரசால் ஒப்பளிக்கப்பட்டதை தொடர்ந்து, பாதிக்கப்பட்ட மீனவர்களின் வங்கி கணக்கில் இந்த நிவாரண தொகை வரவு வைக்கப்பட்டு வருகிறது.

மேலும், சென்னை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு 4, 6, மற்றும் 7 ஆகிய பகுதிகளில் எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட 6,700 குடும்பங்களுக்கு தலா ரூ.7,500 வீதம் மொத்தம் ரூ.5.02 கோடி நிவாரண தொகை வழங்க மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்த நிவாரண தொகை, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர்களது வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

அந்த வகையில், மிக்ஜாம்புயல், கனமழையால் ஏற்பட்டஎண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட 9,001 குடும்பங்களுக்கு ரூ.8.68கோடி வழங்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை - கோழிக்கோடுக்கு வந்தே பாரத் சிறப்பு ரயில்



**சென்னை:** கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு, சொந்த ஊருக்கு செல்லும் பயணிகள் வசதிக்காக, சென்னை சென்ட்ரல் - கோழிக்கோடுக்கு சிறப்பு வந்தே பாரத் சிறப்பு ரயில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரலில் இருந்து டிச.25-ம் தேதி அதிகாலை 4.30மணிக்கு சிறப்பு வந்தே பாரத் ரயில் ( 06041 ) புறப்பட்டு, அதே நாள் பிற்பகல் 3.20 மணிக்கு கோழிக்கோடு அடையும். இந்த ரயில் பெரம்பூர், காட்பாடி, சேலம், ஈரோடு, திருப்பூர், போத்தனூர், பாலக்காடு, சோரனூர், திரூர் ஆகிய நிறுத்தங்களில் நின்று செல்லும். இந்த ரயிலுக்கான டிக்கெட் முன்பதிவு தொடங்கிவிட்டது.

**நாகர்கோவில் - சென்னை:** இதுபோல, நாகர்கோவிலில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு சிறப்பு ரயில் அறிவிக்கப்பட்டுள்ளது. நாகர்கோவிலில் இருந்து டிச.25-ம் தேதி இரவு 11.30 மணிக்கு அதிவிரைவு ரயில் ( 06040 ) புறப்பட்டு, மறுநாள் நண் பகல் 12.15 மணிக்கு சென்னை சென்ட்ரலை வந்தடையும்.

இந்த ரயில் நாகர்கோவிலில் இருந்து புறப்பட்டு வள்ளியூர், திருநெல்வேலி, கோவில்பட்டி, சாத்தூர், விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருச்சிராப் பள்ளி வழியாக சென்னை சென்ட்ரல் வந்தடையும். இந்த சிறப்பு ரயிலுக்கான டிக்கெட் முன்பதிவு தொடங் கிவிட்டது

## இந்தியக் கடலோரப் பகுதியில் ட்ரோன் மூலம் வணிகக் கப்பல் மீது தாக்குதல்



**புதுடெல்லி:** இந்தியக் கடலோரப் பகுதியில் ஆளில்லா விமானம் (ட்ரோன் - Drone) மூலம் வணிகக் கப்பல் மீது தாக்குதல் நடந்தப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேலுடன் தொடர்புடைய லைபீரிய தேசிய கொடி ஏற்றிய வணிகக் கப்பல் ஒன்று சவுதி அரேபியாவில் உள்ள துறைமுகத்தில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு புறப்பட்டுள்ளது. இந்த கப்பல் இந்திய கடல் எல்லையில் அரபிக் கடலில் சென்றுகொண்டிருந்தபோது அதன் மீது ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை ஏஎஃப்பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலை அடுத்து, கப்பலில் வெடிவிபத்து ஏற்பட்டு தீ பற்றியுள்ளது. இந்தத் தாக்குதலால் உயிரிழப்பு நேரிட்டதாக இதுவரை தகவல் இல்லை.

இந்த சம்பவத்தை அடுத்து கடலோர காவல் படைக்குச் சொந்தமான கப்பல் ஒன்று 20 பேருடன் அந்த வணிகக் கப்பலை நோக்கி சென்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும், கடலோர காவல்படை கப்பலான ஐசிஜிஎஸ் விக்ரம், வணிகக் கப்பலை நோக்கி திருப்பிவிடப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. அதேநேரத்தில், இந்தத்

தாக்குலுக்கும் ஈரானில் செயல்படும் புரட்சிப் படை அல்லது ஹவுதி தீவிரவாத குழுவுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கடந்த மாதம் இந்திய பெருங்கடலில் இஸ்ரேலுக்குச் சொந்தமான சரக்குக் கப்பல் மீது ஈரானிய புரட்சிப் படையானது ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார். இதில், அந்தக் கப்பல் சேதமடைந்ததாகவும் தகவல் வெளியானது.

இஸ்ரேல் - ஹமாஸ் போரை அடுத்து, ஈரான் ஆதரவு ஹவுதி படை, செங்கடலில் தனது தாக்குதலை அதிகப்படுத்தியது. ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதால், இஸ்ரேலுக்கு எதிராக தாங்கள் தாக்குதல் நடத்துவோம் என ஹவுதி படை அறிவித்தது. இந்த அறிவிப்பை அடுத்து, இஸ்ரேலுடன் தொடர்புடைய வணிகக் கப்பல்கள் மீது ஹவுதி படையினர் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதையடுத்து, பல கப்பல்கள் தங்கள் வழித்தடத்தை மாற்றிக்கொண்டுள்ளன.

செங்கடலில் ஹவுதி படையினர் நூற்றுக்கும் மேற்பட்ட ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நிகழ்ந்தி உள்ளதாக அமெரிக்காவின் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. 35 நாடுகளைச் சேர்ந்த 10 வணிகக் கப்பல்கள் மீது அவர்கள் தாக்குதல் நடத்தி உள்ளதாகவும் வெள்ளை மாளிகை கூறியுள்ளது. ஹவுதி படையினரின் பின்னணியில் ஈரானுக்கு ஆழமான தொடர்பு உள்ளதாகவும் அது குறிப்பிட்டுள்ளது. அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் காசாவில் தொடர்ந்து குற்றங்களை செய்தால் மத்திய தரைக் கடலை பயன்படுத்த முடியாத நிலை உருவாகலாம் என்று ஈரானிய புரட்சிப் படையின் தளபதி கூறி இருப்பதாகவும் செய்தி வெளியாகி உள்ளது.

## சாக்‌ஷி, பஜ்ரங்கை அடுத்து மல்யுத்த வீரர் வீரேந்தர் சிங் விலகல்; பத்மஸ்ரீ விருதை திருப்பிக் கொடுப்பதாக அறிவிப்பு



**புதுடெல்லி:** சாக்‌ஷி மாலிக், பஜ்ரங் புனியாவைத் தொடர்ந்து மல்யுத்த வீரர் வீரேந்தர் சிங்கும் மல்யுத்த விளையாட்டில் இனி ஈடுபட போவதில்லை என அறிவித்துள்ளார். பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் மீது பாலியல் குற்றச்சாட்டு கூறிவரும் சாக்‌ஷி மாலிக் உள்ளிட்ட வீராங்கனைகளுக்கு ஆதரவளிக்கும் விதமாக வீரேந்தர் சிங் இந்த முடிவை எடுத்துள்ளார். மேலும் தனது பத்மஸ்ரீ விருதையும் திரும்ப ஒப்படைக்கப் போவதாக கூறியுள்ளார்.

இது தொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ள வீரேந்தர் சிங், “எனது சகோதரியும், தேசத்தின் மகளுமான சாக்‌ஷி மாலிக்குக்காக எனது பத்மஸ்ரீ விருதை திரும்ப ஒப்படைக்கிறேன். பிரதமர் மோடி ஜி, உங்களின் மகளும், எனது சகோதரியுமான சாக்‌ஷி மாலிக்கை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். இந்த விவகாரத்தில் தேசத்தின் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் தங்களின் முடிவை தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் புதிய தலைவராக, அந்த அமைப்பின் முன்னாள் தலைவரும், பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவருமான பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் நெருங்கிய உதவியாளர் சஞ்சய் சிங் தேர்வு செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக மல்யுத்த வீராங்கனை சமீபத்தில் சாக்‌ஷி மாலிக் மல்யுத்தத்தை விட்டு விலகுவதாக அறிவித்தார்.

தொடர்ந்து மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா மல்யுத்தத்தை விட்டு விலகுவதாக அறிவித்ததோடு, தனக்கு அளிக்கப்பட்ட பத்மஸ்ரீ விருதை பிரதமர் மோடியிடம் திரும்ப ஒப்படைப்பதாக கூறி, நேற்று இரவு விருதை பிரதமர் இல்லத்தின் வாசலில் வைத்துவிட்டு சென்றார். இந்த இருவரை தொடர்ந்து தற்போது வீரேந்தர் சிங்கும் மல்யுத்த விளையாட்டில் ஈடுபட போவதில்லை என அறிவித்துள்ளார். வாசிக்க > “பிரதமரே... நான் மல்யுத்தத்தை கைவிடுகிறேன்; பத்மஸ்ரீ விருதையும் திரும்ப ஒப்படைக்கிறேன்” - பஜ்ரங் புனியா

**பின்புலம் என்ன?** - பிரிஜ் பூஷண் சரண் சிங்குக்கு எதிராக இந்திய மல்யுத்த வீராங்கனைகளான சாக்‌ஷி மாலிக், வினேஷ் போகத் ஆகியோர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பாலியல் குற்றச்சாட்டுகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவாக முன்னணி வீரரான பஜ்ரங் பூனியாவும் போராட்டத்தில் கலந்து கொண்டார். இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிமன்றம், பிரிஜ் பூஷண் சரண் சிங் மீது வழக்கு பதிவு செய்ய உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து அவர், பதவியை இழந்தார். இந்தப் போராட்டத்தின் போது பிரிஜ் பூஷண் சரண் சிங்கின் ஆதரவாளர்கள் தேர்தலில் போட்டியிடக் கூடாது என சாக்‌ஷிஉ மாலிக் உள்ளிட்ட வீராங்கனைகள் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கையை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் ஏற்றுக்கொண்டிருந்தார்.

இந்நிலையில், பிரிஜ் பூஷண் சரண் சிங் ஆதரவாளரான சஞ்ஜய் சிங் புதிய தலைவராக தேர்வாகி உள்ளது போராட்டம் நடத்திய மல்யுத்த வீராங்கனைகளை அதிர்ச்சி அடைய செய்துள்ளது. 15 நிர்வாகிகளை தேர்வு செய்வதற்காக நடைபெற்ற தேர்தலில் பிரிஜ் பூஷண் சரண் சிங்கின் ஆதரவாளர்கள் 13 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

**‘மல்யுத்தத்தை விட்டு விலகுகிறேன்’** - இந்திய மல்யுத்த சங்கத்தின் தலைவராக சஞ்ஜய் சிங் தேர்வாகி உள்ள நிலையில், சாக்‌ஷி மாலிக் மல்யுத்த போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர், கண்ணீர் மல்க கூறும்போது, “நாங்கள் எங்கள் இதயத்திலிருந்து போராடினோம், ஆனால் பிரிஜ் பூஷனின் வணிக கூட்டாளியும் அவரது நெருங்கிய உதவியாளருமான

சஞ்சய் சிங் தலைவராக தேர்வாகி உள்ளார். இதனால் நான், மல்யுத்தத்தை விட்டு விலகுகிறேன். நாங்கள், ஒரு பெண் தலைவராக வரவேண்டும் என விரும்பினோம். ஆனால் அது நடக்கவில்லை" என்றார்

## இந்திய அரசின் கடன் சுமை: ஐஎம்எஃப் எச்சரிக்கையும், மத்திய அரசின் 'நிராகரிப்பு' விளக்கமும்




**புதுடெல்லி**: இந்திய அரசின் கடன் குறித்த சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) மதிப்பீடு உண்மை நிலை அல்ல, அனுமானம்தான் என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.


சர்வதேச நாணய நிதியம் இந்திய அரசின் கடன் சுமை குறித்து சமீபத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதன்படி, 2027-க்குள் மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட 100% அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள நிதி தேவைப்படும் என்பதால், நீண்டகால கடன் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக எச்சரித்த சர்வதேச நாணய நிதியத்தின் அந்த அறிக்கையில், மத்திய நிதி அமைச்சகம் புதிய திட்டங்களை கொண்டு வர வேண்டும் எனவும், தனியார் துறைகளில் முதலீடுகளை அதிகரிக்கவும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த மதிப்பீட்டை மத்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது. இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சகம் வெளியிடப்பட்டுள்ள விளக்கத்தில், "சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீடுகள் அனுமானங்களே. அவை உண்மை நிலையை பிரதிபலிக்கும் வகையில் இல்லை. இந்திய அரசின் கடன், உள்நாட்டு உற்பத்தியை விட 100% அதிகமாக இருக்கும் என்று கூறும் ஐஎம்எஃப் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விளக்கம் தவறானது. பொது அரசாங்கக் கடனில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் கடனும் அடங்கும். 2020-21ல் சுமார் 88% ஆக இருந்த கடன், அதுவே 2022-23ல் சுமார் 81% ஆக குறைந்துள்ளது. கடன் அளவுகளை மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியா ஒப்பீட்டளவில் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது.

இந்தியாவை பொறுத்தவரை மாநிலங்கள் தனித்தனியாக தங்கள் நிதி பொறுப்புச் சட்டத்தையும் இயற்றியுள்ளன. மேலும், அவை அந்தந்த மாநில சட்டமன்றங்களால் கண்காணிக்கப்படுகிறது. எனவே, பொது அரசாங்க கடன் நீண்ட காலத்துக்கு கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐஎம்எஃப் மதிப்பீடானது ஒரு நூற்றாண்டுக்கு ஒருமுறை நடக்கும் கோவிட்-19 போன்ற ஓர் அசாதாரண சூழ்நிலையின்போது நடக்கலாம். இந்த நூற்றாண்டில் இந்தியா சந்தித்த அசாதாரண சூழ்நிலைகள் உலகளவில் நடந்தவையுடன் தொடர்புடையவை.

எடுத்துக்கட்டாக, உலகளாவிய நிதி நெருக்கடி, கோவிட்-19, ரஷ்யா-உக்ரைன் போர் போன்றவை. இதுபோன்ற அசாதாரண சூழ்நிலைகள் உலகப் பொருளாதாரத்தை ஒரே மாதிரியாக பாதித்தன. எனினும் சில நாடுகள் அசாதாரண சூழ்நிலையிலும் பாதிக்கப்படாமல் இருந்தன. அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சீனாவுக்கான கடன் அளவானது அவற்றின் ஜிடிபியில் முறையே 160, 140 மற்றும் 200 சதவீதமாக உள்ளது. அதுவே இந்தியாவோடு ஒப்பிடுகையில் மிக மோசமான நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது" என்று மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## 2023-ன் உலக சராசரி வெப்பம் 1.5 டிகிரி செல்சியஸை கடக்க 99% வாய்ப்பு: ஆய்வு



2023-ஆம் ஆண்டின் உலக சராசரி வெப்பம் 1.5 டிகிரி செல்சியஸாக இருக்க 99% வாய்ப்பு உள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர்.

உலக வரலாற்றில் மிகவும் வெப்பமான ஆண்டாக 2023 அறியப்பட்டுள்ளதாக ஐ.நா.வின் உலக வானிலை ஆய்வு மையம் (WMO - World Metorological Organisation) அறிவித்தது. புவி வெப்பமயமாதலைத் தடுக்க அவசரமாக உரிய நீடித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் ஐ.நா. காலநிலை பாதுகாப்பு இயக்கங்கள், சூழலியல் ஆர்வலர்கள் மத்தியில் வலுத்துள்ள நிலையில், 2023-ஆம் ஆண்டின் உலக சராசரி வெப்பம் 1.5 டிகிரி செல்சியஸாக இருக்கும் என்ற கணிப்பு கவனம் பெற்றது. இந்நிலையில் இன்னொரு அதிர்ச்சியாக 2023-ஆம் ஆண்டின் உலக சராசரி வெப்பம் 1.5 டிகிரி செல்சியஸாக இருக்க 99 சதவீத வாய்ப்புள்ளதாக இன்னொரு அறிக்கை வெளியாகியுள்ளது. இது குறித்து சூழலியல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 2015-ஆம் ஆண்டு பாரீஸ் பருவநிலை ஒப்பந்தம் வரையறுக்கப்பட்டு, அந்த ஒப்பந்தமானது 2016-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கையெழுத்தானது. பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இந்தியா உட்பட 175 நாடுகள் கையெழுத்திட்டன. உலக வெப்பநிலை உயர்வை 2 டிகிரி செல்சியஸுக்கு மிகாமல் கட்டுப்படுத்த

வேண்டும் என்பதே பாரீஸ் ஒப்பந்தத்தின் முக்கிய இலக்காக வரையறுக்கப்பட்டது. ஆனால், அக்டோபர் 2023-ன் முடிவடைந்த காலத்தில் எடுக்கப்பட்ட கணக்கின்படி சர்வதேச சராசரி வெப்பம் 1.4 டிகிரி செல்சியஸ் அதிகரித்திருந்தது. இந்நிலையில், இந்த ஆண்டின் சராசரி வெப்பம் 1.5 டிகிரி செல்சியஸாக இருக்கும் என கணித்துள்ளது.

கலிபோர்னியாவை மையமாகக் கொண்ட 'பெர்க்லி எர்த்' அமைப்பு இந்த கணிப்பை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், எல் நினோ ஆண்டில் கடல் மேல்பரப்பு வெப்பமாவது நடக்கும் என்றாலும் இந்த ஆண்டு வெப்பமடைதல் ஆச்சரியமளிக்கும் வகையில் நடந்துள்ளது. அதனால் சராசரி ஆண்டு வெப்பம் 1.5 டிகிரி செல்சியஸ் என்று 1850-1900 சராசரியைவிட அதிகரிக்க்கும் என்று கணிக்கிறோம். இதற்கான வாய்ப்பு 99 சதவீதம் உள்ளது என்று அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

2023 தொடங்கி ஜூன் தொடங்கி செப்டம்பர் வரையிலான 6 மாதங்களுமே சராசரி வெப்பநிலை புதிய இலக்குகளை எட்டியுள்ளது. 2022-ல் கரியமில வாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்ஸைடு ஆகிய பசுமைக் குடில் வாயுக்கள் வெளியேற்றம் வரலாறு காணாத அளவு அதிகமாக இருந்தது. அது அப்படியே 2023-ல் மேலும் அதிகரித்துள்ளது. தொழில் புரட்சி காலத்துக்கு முந்தைய அளவைவிட 50 சதவீதம் அதிகமாக கரியமில வாயு வெளியேற்றம் தற்போது உள்ளது. வட அமெரிக்கா, ஐரோப்பாவின் பனிப் பாறைகள் உருகுதலும் அதிகரித்துள்ளது. பிரான்ஸ், ஜெர்மனி நிலபரப்பை சேர்த்தால் எவ்வளவோ அதைவிட அதிகளவிலான பனிப் பாறைகள் உருகியுள்ளன.

இந்த ஆண்டு எல் நினோ முன்கூட்டியே உருவாகியுள்ளது. அதேபோல் எல்நினோவின் இரண்டாவது ஆண்டு முதல் ஆண்டைவிட கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். இத்தகைய மோசமான காலநிலையால் உணவுப் பாதுகாப்பின்மை அதிகரிக்கும், பெரியளவில் மக்கள் இடம் பெயர்தலும் அதிகரிக்கும் என்றும் விஞ்ஞானிகள் கணிக்கின்றனர்.